
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 25 ISSUE 08 AUGUST 2025

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-




இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் மடல்


ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ரோமர் 8:31 தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? ஆம் நமக்கு வருகின்ற போராட்டங்கள், நெருக்கங்கள், பாடுகளில் தேவன் நம்முடைய பட்சத்திலிருந்து பாதுகாத்து நடத்த வேண்டும். கடந்த நாட்களில் நடைபெற்ற எல்லா சுவிசேஷ கூட்டங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். குறிப்பாக சென்னை குன்றத்தூரில் நடைபெற்ற நற்செய்தி விடுதலைப் பெருவிழாவை கடைசி நேரம் மைதானம் மாற்றப்பட்டாலும் தேவன் தடையில்லாமல் நடத்த கிருபை செய்தார். ஐயா டேவிட் தேவசகாயம் அவர்கள் குடும்பத்தோடு மிகவும் நேர்த்தியாக ஏற்பாடு செய்திருந்தார்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. அதே போல் செம்பட்டி வானத்தின் வாசலிலும், மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்திலும் தேவன் அளவில்லாமல் அசைவாடி அநேகரை கொண்டு வந்து ஆசீர்வதித்து கொண்டிருக்கிறார். குறிப்பாக திண்டுக்கல் பேருந்து நிலையத்திலிருந்து வானத்தின் வாசலுக்கு விசேஷ பேருந்துகளை ஏற்பாடு செய்திருக்கிறோம். நாம் இப்படிப்பட்ட ஜெபங்களில் இணைந்து ஜெபித்து தேவனுடைய ராஜ்யத்தை ஏற்படுத்தவும், கட்டி எழுப்பவும் இணைந்து செயல்பட வேண்டும். கர்த்தருக்கு சித்தமானால் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அநேக வெளியூர் சுவிசேஷ கூட்டங்கள் உண்டு அதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். அது மட்டுமல்ல நாம் விரைவில் போஸ்டலில் நம்முடைய மாத இதழை அனுப்பவும் RNI-ல் பிரிண்டிங்பிரஸ் அட்ரஸ் மாற்றம் செய்யப்படவும், போஸ்டல் அனுமதி கிடைக்கவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருக்கு சித்தமானால் ஆகஸ்ட் 14-ஆம் தேதி திண்டுக்கலில் உள்ள CSI தூய பவுல் ஆலய வளாகத்திலிருக்கும் பாரிஸ் ஹாலில் இரவு ஜெபம் வைத்திருக்கிறோம். இதிலே கலந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம் மற்றும் மீடியா ஊழியங்களுக்காக தினந்தோறும் ஒளிபரப்பாகும் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும் நிகழ்ச்சிக்காகவும், இயேசுவை தினம் பார்ப்போம் நிகழ்ச்சிக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்கள் ஜெபத்தாலும் காணிக்கைகளினாலும் தொடர்ந்து இந்த ஊழியத்தை தாங்குங்கள். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நாம் அனைவரோடும் இருப்பதாக.



இயேசுவின் பணியில்

L. Vincent

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)



சகோதரர்
L.வின்சென்ட்ராஜ்

# கிருபையினால் கிடைத்த ஆசீர்வாதம்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய வார்த்தையின் மூலம் உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**லூக்கா 1:28 அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.**

ஆண்டவராகிய தேவன் நீங்கள் இருக்கும் இடத்திற்கு தேவ தூதனை அனுப்புவார். மரியாள் இருந்த வீட்டில் தேவதூதன் உள்ளே வந்து மரியாளை பார்த்து கிருபை பெற்றவளே என்றான். மரியாளுக்கு சிறுவயதிலே ஒரு நம்பிக்கை வந்து விட்டது. கன்னிப்பெண் கருத்தாங்கி, கன்னிகையாக ஒரு மகனை பெறுவாள் என்ற அந்த வார்த்தை. என் வாழ்க்கையில் இந்த வார்த்தை நிறைவேற கூடாத என்று சொல்லி, அந்த நாட்களில் அநேக பெண்கள் திருமணம் வேண்டாம் என்று காத்திருந்தார்கள். சில சமயம் நாம் ரயிலுக்கு காத்திருப்போம். இந்திய ரயில்வேயில் எனக்கு பிடித்த வாசகம் பயணிகளின் கனிவான கவனத்திற்கு என்று சொல்வார்கள். அப்படி சொன்னால் வண்டி தாமதமாக வரும் என்று அர்த்தம். ஒரு தீமையை, தாமதத்தை அவர்கள் கனிவான கவனத்துக்கு என்று சொல்லி நம்மை அமைதிப்படுத்த முடியும் என்றால் கர்த்தரால் முடியுமா முடியாதா?. ரயிலுக்காக அப்படி காத்திருக்கிறோம். அந்த வார்த்தையை கேட்ட உடனே அமைதியாகிறோம். கன்னிப்பெண் கருத்தாங்கி ஒரு மகனை பெறுவாள் என்று சொன்னவுடனே கர்த்தருக்காக மரியாள் திருமணம் முடிவதற்கு முன்பே காத்திருந்தாள்.

## உலக இரட்சகர்

மரியாள் இருந்த வீட்டுக்குள் கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி அவளைப் பார்த்து கிருபை பெற்றவளே என்று சொல்லுகிறார். மரியாள் ஜெபம் பண்ணி ஜெபம் பண்ணி அந்த ஜெபத்திற்கு சம்பளமாக தேவனுடைய கிருபையை பெற்றாள். நானும் ஜெபம் பண்ணுகிறேன் எனக்கு குழந்தை இல்லையே, கடன் பிரச்சனை மாறவில்லையே, எனக்கு எந்த பிரச்சனையும் தீரவில்லையே என்று புலம்பி கொண்டிருக்கிறீர்களா?, எது கிடைத்ததோ இல்லையோ கர்த்தர் உங்களை பார்த்து சொல்லுகிறார் உங்கள் மேல் ஒரு கிருபை இருக்கின்றது என்று. நீங்கள் உயிரோடு இருக்கும் நாளெல்லாம் மரியாளோடு இருந்த கிருபை உங்கள் மேலும் இருக்கும். ஆகவே தான் தூதனை அனுப்பி கிருபை பெற்றவளே என்று சொல்லுகிறார். நீங்கள் தயவு பெற்றவர்களாக, இரக்கம் பெற்றவர்களாக இருக்கிறீர்கள்.

ஸ்திரீகளுக்குள் கிருபை பெற்றவள், ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று சொல்லுகிறார். நீங்கள் அல்லும் பகலும் தேவனை நோக்கி ஜெபிக்கும் போது பரமபிதா உங்களை விட்டு விடுவாரா? உங்கள் குடும்பத்தை விட்டுவிடுவாரா? குடிக்கின்ற உங்கள் கணவனை நரகத்தில் தள்ளி விடுவாரா? விடமாட்டார். இந்த சூழ்நிலையை மாற்றுவார். அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே கிருபை பெருக போகின்றது.

என் கணவர் என்னை பாராட்டவே மாட்டேங்கிறார். யார் பாராட்டினாலும் பாராட்டாவிட்டாலும் கடமையையே செய்வோம் என்று பெண்கள் செயல்படுகிறார்கள். இந்த எதிர்பார்ப்பை தான் தாவீது ராஜா சொல்லுகிறார். சங் 62:5-ல் என் ஆத்துமாவே தேவனையே நோக்கி அமர்ந்திரு. நான் நம்புகிறது அவராலே வரும். இதை கத்தோலிக்க மொழி பெயர்ப்பில் நான் எதிர் பார்க்கிறது அவரிடத்தில் இருந்து வரும் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஸ்திரீகளுக்குள் முதலில் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்றால் கர்த்தருடைய கிருபை உங்கள் மேல் இறங்க வேண்டும். நீங்கள் திருமணம் முடித்து வரும் போது எத்தனை பவுன் நகை போட்டு அனுப்புனாங்க என்று நியாபகம் உங்களுக்கு இருக்கும். உங்கள் கணவர் வீடு கட்டணும். பிள்ளைக்கு வளைகாப்பு பண்ணனும் என்று சொல்லுவீர்கள். உங்கள் வீட்டில் நகை கொடுக்கலாம். ஆஸ்தி கொடுக்கலாம். வீடு கொடுக்கலாம், கார் வாங்கி கொடுக்கலாம். fixed டெபாசிட் போடலாம் ஆனால் வேத வசனம் சொல்லுகிறது நீதி 19:14-ல் வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்திரம். புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு என்று. நகை கொடுக்கிறாங்களோ இல்லையோ என்னுடைய மனைவி கிருபையோடு வந்தாள் இதை பாராட்டுங்கள். புத்தியுள்ள மனைவி கர்த்தர் தரும் ஈவு. வீடு யார் வேண்டு மானாலும் கொடுக்கலாம். நகை யார் வேண்டுமானாலும் போடலாம். எது வேணுமானாலும் கொடுத்திடலாம். புத்தியை தருகிறவர் யார்? இரட்சிப்பை தருகிறவர் யார்? கர்த்தர். பெண்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் முதலில் கிருபை பெற வேண்டும்.

ஒரு குழந்தை பிறக்க போகிறது. அவர் பெரியவராயிருப்பார், உன்னதமான வராயிருப்பார். அவர் ராஜ்யத்துக்கு முடிவேயில்லை என்று சொன்னவுடனே மரியாள் இந்த வாழ்த்துதலுக்கு கலங்கி விட்டார்கள், பயந்துவிட்டார்கள். அது போல நீங்கள் கலங்கிட்டீங்களா?.நீங்கள் ஜெபம் பண்ணும் போது உங்கள் கணவர் குடித்துவிட்டு வருவார். அப்பொழுது தான் ஜெபம் பண்ண முடியாது. என்று சாத்தான் ஜெபத்தை நிறுத்த முடிவு செய்வான். சாத்தான் நம்மை அலை-க்கழித்து விட்டு தான் போவான். அவனுக்கு கொஞ்ச காலம் தான். நமக்கோ நீண்ட காலம் இருக்கிறது.

## இரட்சிப்பு

கொர்நேலியு என்று ஒரு மனிதன் இருந்தான். அவனுக்கு உண்மையான கடவுள் யார் என்று தெரியாது. ஆனால் மூன்று வேளையும் ஜெபிப்பான். பக்தி உள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கர்த்தர் தெரிந்து கொண்டிருக்கிறார். கொர்நேலியு மூன்று வேளையும் ஜெபம் பண்ணி. தான தர்மங்களை செய்து, ஏழைகளுக்கு உதவி செய்தார். இயேசு எந்த மனிதனுக்குள் வருகிறாரோ அவன் நன்மை செய்கிறவனாக, ஜெபிக்கிறவனாக மாறுவான். கர்த்தர் ஒரு தூதனை கொர்நேலியு வீட்டிற்கு அனுப்பி சொல்கிறார் பேதுரு என்ற ஒரு மனிதன். செசரியாவில் தோல் பதனிடும் சீமோன் வீட்டில் இருக்கிறான். நீ ஆள் அனுப்பி அவனை அழைத்து வரச்சொல். நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப் படுவதற்கான வார்த்தைகளை அவன் சொல்லுவான் என்றார். நீங்கள் ஜெபம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் ஒரு தூதனை அனுப்புவார். நீங்கள் அவசரப்படாதீர்கள்.

எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே. 2 கொரி 1:20.அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் ஆம் என்றும், இல்லை என்றும் அவரிடத்திலிருந்து வருவதில்லை. ஆமென் என்றே சொல்லுகிறார். உங்கள் ஜெப குறிப்புகளுக்கெல்லாம் ஆமென் என்று தேவன் சொல்லிக் கொண்டு இருக்கிறார். உங்களுக்காக பரிந்து பேசிகிட்டே இருக்கிறார். காலையில் எழுந்தவுடனே ஆபேல் உடைய இரத்தத்தை காட்டிலும் நமக்காக நன்மையானதை பேசுகின்ற இயேசுவின் இரத்தத்துக்குள் வந்திடுங்கள். கர்த்தர் இன்றைக்கு வழியை திறக்கப் போகிறார்.

## பரிசுத்த ஆவியின் அபிஷேகம்

தேவ தூதனுடைய வாழ்த்துதலை கேட்ட உடனே மரியாள் பயந்து, கலங்கி திகைத்து நானோ கணவனை அறியேன். இது எப்படி ஆகும் என்றாள். உடனே பரத்திலிருந்து ஒரு வார்த்தை வருகிறது. பரிசுத்த ஆவி உன்மேல் வருவார் என்று. உங்கள் அப்பா போட்டு விட்ட சீதனத்தை காட்டிலும், சொத்துக்களை காட்டிலும், நகையை காட்டிலும் பரிசுத்த ஆவியானவர் மேலானவர். உன்னதத்தின் ஆவியானவர் உயர்ந்தவர். ஆவியானவர் வந்து விட்டால் உன்னத பெலன் உங்கள் மேல் வந்துவிடும். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள்ளே பரிசுத்த ஆவியை ஊற்றுகிறார். ஒவ்வொரு விசுவாசியும் இந்த பரிசுத்த ஆவியினால் நிரம்ப வேண்டும். உன்னதருடைய வல்லமை உங்கள் மேல் நிழலிடும். நீங்கள் வேறு மனுஷராவீர்கள். குடும்பத்தில் சண்டையின் ஆவி ஓடும். வாக்குவாதத்தின் ஆவி ஓடும். குடும்ப சூழ்நிலை மாறிவிடும்.



இயேசு உயிர்த்தெழுந்த போது லூக் 12:49-ல் பூமியிலே அக்கினியை போட வந்தேன். இந்த பூமியில் பரிசுத்த ஆவி என்ற அக்கினியை போட வந்தேன். அது பற்றி எரிய விரும்புகிறேன் என்றார். நீங்கள் சாதாரண நபர் அல்ல. எரிந்து பிரகாசிக்கின்ற நபர். யூதருக்கு பயந்து சீஷர்கள் எல்லாத்தையும் விட்டு வந்தோமே என்று புலம்பினார்கள். யோவா 19:20-ல் வசித்துப் பார்த்தால் சீஷர்கள் எல்லாரும் யூதருக்கு பயந்து கதவுகளை மூடி வைத்து கொண்டு அழுது கொண்டிருக்கிறார்கள். அப்படி அழுது கொண்டிருந்த இடத்தில் இயேசு தோன்றினார். தான் உயிர்த்தெழுந்த உடனே மகதலேனா மரியாளுக்கு காணப்பட்டார். மாற்கு 16:10-ல் அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் புறப்பட்டு அவரோடே கூட இருந்தவர்கள் துக்கப்பட்டு அழுது கொண்டிருக்கையில் அவர்களிடத்தில் போய், அந்த செய்தியை அறிவித்தாள். சீஷர்கள் கதவுகளை மூடி அழுது கொண்டிருக்கும் போது திடீரென்று இயேசு உள்ள போய் சமாதானம் சொல்லுகிறார்.

## சுவிசேஷம் அறிவித்தல்

லூக் 24:10-12-ல் இவைகளை அப்போஸ்தலருக்குச் சொன்னவர்கள் மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும் இவர்களுடனேகூட இருந்த மற்ற ஸ்திரீகளுமே. இவர்களுடைய வார்த்தைகள் அவர்களுக்கு வீண்பேச்சாகத் தோன்றினதினால், அவர்கள் இவர்களை நம்பவில்லை. பேதுருவோ எழுந்திருந்து கல்லறையினிடத்திற்கு ஓடி, அதற்குள்ளே குனிந்து பார்க்கையில், சீலைகளைத் தனிப்பட வைத்திருக்கக்கண்டு, சம்பவித்ததைக் குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக் கொண்டு போனான்.

அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார். கடவுள் பற்ற வைத்தது என்றைக்கும் அணையாது. இன்றைக்கு சுவிசேஷம் அறிவிக்க வேண்டும். அறிவிக்காமல் இருக்கிறதால தான் அநேகர் தற்கொலை பண்ணிக் கொள்கிறார்கள். அந்த இரத்தப்பழி உங்கள் மேல் வரும். சுவிசேஷம் அறிவிக்காதிருந்தால், இந்த இரட்சிப்பை அறிவிக்காதிருந்தால் ஐயோ என்று பவுல் சொல்லுகிறார்.

நாட்கள் பொல்லாதவைகளாக இருக்கிறது. காலத்தை வீணடிக்காதிருங்கள்.

வீணான மனுஷனாகாதிருங்கள். அதற்கு தான் ஆண்டவர் இந்த நாட்களில் நமக்கு பரிசுத்த ஆவியை கொடுத்து நம்மேல் ஊற்றிப் பற்றவைத்துள்ளார். உலக முழுவதும் சுவிசேஷம் வேகமாக அறிவிக்கப்படுகிறது. இந்தியாவில் சுவிசேஷத்தினிமித்தம் அநேகர் சிறையிலே தள்ளப்பட்டு விட்டார்கள். இரத்த சாட்சிகளாய் மரிக்கிறார்கள். கர்த்தருடைய வருகை வரப்போகின்றது இனி நாம் காலத்தை வீணடிக்க கூடாது.

1 சாமு 1:15-ல் அதற்கு அன்னாள் பிரதியுத்தரமாக அப்படியல்ல, என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ, நான் திராட்சரசமாகிலும் மதுவாகிலும் குடிக்கவில்லை, நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன் என்றாள். அங்கே அன்னாள் ஜெபம் பண்ணி இருதயத்தை ஊற்றினாள். கர்த்தர் ஒரு சாமுவேலை எழுப்பினார். இன்றைக்கு நீங்கள் இருதயத்தை ஊற்றி கண்ணீரோடு ஜெபித்தால் உங்கள் வீட்டில் கர்த்தர் சாமுவேலை எழுப்புவார். தீர்க்கதரிசிகளை எழுப்புவார். ஆவிக்குரியப் பிள்ளைகளை பெற்றெடுப்பீர்கள் அந்தகாரத்தை மாற்றுவார். நிந்தை மாறும். அவமானம் மாறும். கட்டுகள் உடையும். தோல்விகள் ஜெயமாய் மாறும்.

லூக் 8:3-ல் ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ் செய்துகொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள். பெண்கள் ஆஸ்திகளால் ஊழியம் செய்தார்கள். அள்ளிக் கொடுத்தார்கள். நீங்களும் ஆசீர்வதிக்கப்பட ஊழியம் செய்ய வேண்டும். நீங்கள் ஸ்திரீகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக, கிருபை பெற்றவர்களாக, பரிசுத்த ஆவியை பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதனால் தான் நம்மை ஆண்டவர் இரட்சித்து பூமியிலே வைத்திருக்கிறார். என் ஆண்டவராகிய தேவன் தாமே இந்நாளில் இப்படிப்பட்ட கிருபைகளை உங்களுக்கும் கொடுத்து உங்களை ஆசீர்வதித்து நடத்துவாராக.





Jesus Lives MINISTRIES

பெங்களூரில்

# எழுப்புதல்
## உபவாச ஜெபம்

ஆகஸ்ட்

**2,3**

சனிக்கிழமை,
ஞாயிற்றுக்கிழமை

காலை
9:00 AM முதல்



**இடம்:**
சட்டன் நினைவு ஆலயம், ஜெயநகர், பெங்களூரு-560 011.

தொடர்புக்கு : 94980 00449 , 94486 89155

---

ஆகஸ்ட்
**09**

செம்பட்டி

# ஆசீர்வாத
## உபவாச ஜெபம்

ஆகஸ்ட்
**08**
இயேசுவின்
பாதத்தில்

வெள்ளி,
**சனிக்கிழமை**
காலை 9:30 AM முதல்
மதியம் 2:00 PM வரை




**இடம்:**
வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையம்,
செம்பட்டி, திண்டுக்கல்.

திண்டுக்கல் பேருந்து நிலையத்திலிருந்து
பேருந்து வசதி உண்டு மேலும்,
விபரங்களுக்கு



தொடர்புக்கு : 94980 00449, 94428 00449


மதுரையில்
ஆகஸ்ட்
16
எழும்புதல்
உபவாச ஜெபம்
சனிக்கிழமை
9:30 AM- 2:00 PM
இடம்:
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், பைபாஸ் ரோடு,
பழங்காநத்தம், PRC Depot அருகில், மதுரை.
தொடர்புக்கு : 94428 00449,94980 00449


LIVE
புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்
நம்பிக்கையின்
இரவு
ஆகஸ்ட்
31
ஞாயிற்றுக்கிழமை
இரவு 10:30 AM முதல்
12:30 PM வரை
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள்
மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது.
உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள் உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய தொலைபேசி எண் 94428 00449

சாட்சி பகுதி

# கடினமான காரியத்தை இலகுவாக்கிறவர்.



**சகோதரி. செல்வராணி - திண்டுக்கல்**

கடந்த மாதத்தில் என் தம்பி உஷைன் ஸ்டீபனுக்கு கல்லீரலில் பாதிப்பு ஏற்பட்டு மிகவும் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்தான். மருத்துவர்கள் எங்களால் முடியாது கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று சொன்ன சூழ்நிலையில் முழுக்குடும்பமும் கண்ணீரில் நின்றோம். அவனுக்கு இரண்டு சிறுபிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களின் நிலையை நினைத்து மிகவும் அழுதோம். அப்பொழுது நான் தங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் தம்பியின் சரீரசுகத்திற்காகவும், தேவன் அவனுக்கு இரக்கம் செய்யவும், ஜீவனைத் தரவும் ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். தாங்கள் அவனுக்காக பாரத்தோடு ஜெபித்தீர்கள் தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புதம் செய்தார். மரண பள்ளத்தாக்கை கடந்து ஜீவனோடு வர தேவன் கிருபை செய்தார். மூன்று நாட்கள் கழித்து தீவிர சிகிச்சை பிரிவிலிருந்து நார்மல் வார்டுக்கு மாற்றினார்கள். தற்போது நல்ல சுகத்தோடு இருக்கிறான். சுகம் தந்து வாழ வைத்த தேவனுக்கு கோடான கோடி ஸ்தோத்திரம்.


**சகோதரி. தங்கத்தாய் - திண்டுக்கல்**

எங்களுடைய சொந்த கிராமத்தில் நாங்கள் இடம் வாங்கி 24 வருடங்கள் ஆகியும் அந்த இடத்தில் ஒன்றும் செய்ய முடியாமல் பல தடைகள், போராட்டங்கள் இருந்தது. இதை நினைத்து நாங்கள் துக்கப்பட்ட, துயரப்பட்ட நாட்கள் தான் அதிகம். எல்லா ஆசீர்வாதங்களும் இருந்தும் அனுபவிக்க முடியாத சூழ்நிலையில், மிகுந்த வேதனையில் இருந்தோம். மே மாதம் 10-ஆம் தேதி வானத்தின் வாசலில் நடைபெற்ற ஆசீர்வாத உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டு இரண்டு காரியத்திற்காக கண்ணீரோடு ஜெபித்தேன். அப்பொழுது சகோதரர் அவர்கள் மூலமாக தேவன் உபா 6:10-12-ல் சொல்லப்பட்ட வசனத்தின்படி என்னோடு பேசினார். அந்த வார்த்தையை நான் விசுவாசித்தேன். இது தேவன் எனக்காக சொன்ன வார்த்தை என்று அறிக்கையிட்டு ஜெபித்தேன். கூட்டத்தின் முடிவில் சகோதரியிடம் சென்று இரண்டு காரியத்திற்காக ஜெபிக்க சொன்னேன். பிள்ளைகள் திருமண காரியத்திற்காக, காட்டில் போர் போட வேண்டும் என்று, அவர்கள் ஜெபித்து இரண்டு காரியமும் விரைவில் நடக்கும் என்று சொன்னார்கள். அந்த வார்த்தையை விசுவாசித்து வீட்டிற்கு கடந்து வந்து ஜெபித்தோம். அடுத்த வாரத்திலேயே காட்டில் 2 இடங்களில் போர் போடவும், நிறைய தண்ணீர் வரவும் தேவன் கிருபை செய்தார். 24 வருடகால பிரச்சனையை மாற்றினார். ஆசீர்வாதத்தை தந்து எங்களை அந்த இடத்தில் உயர்த்தினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.
ஜெபித்த உங்களுக்கும் நன்றி.

# கடந்த மாதத்தில் நடந்த கூட்டங்களின் சில பகுதிகள்

## செம்பட்டியில் ஆசீர்வாத உபவாச ஜெபம்

வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் ஜீலை 12 ஆம் தேதி நடைபெற்ற ஆசீர்வாத உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். அநேக புதிய ஜனங்களை தேவன் அழைத்து வந்தார். அவர்கள் வாழ்வில் மனமாற்றத்தை கொடுத்து. அவர்கள் மன்றாட்டுக்கு பதில் தந்து அவர்களை சாட்சியாக வாழ வைத்திருக்கிறார். தேவனுக்கு கோடான கோடி நன்றி. இக்கூட்டங்களில் நம் சகோதரி அவர்கள் பாடல்களை பாடி. ஆராதனையை நடத்தும்போது.






நம் சகோதரர் அவர்கள் தேவ செய்தி கொடுக்கும் போதும் தேவன் ஜனங்களை தொட்டு அவர்களை விடுதலையாக்கிறார். சகோதரர் டேவிட் விஜயகாந்த் மற்றும் சகோதரி ஜெஸிந்த டேவிட் அவர்கள் கொடுத்த தேவசெய்தியின் மூலம் அநேகர் ஆறுதலையும் ஆசீர்வாதத்தையும் பெற்றுச் சென்றார்கள். தேவன் அவர்களை வல்லமையாக பயன்படுத்தினார். நீங்களும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற உங்களை அன்போடு அழைக்கிறோம்.





# சென்னை, மதுரை கூட்டங்கள்

சென்னையில் ஜீலை 5,6–ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாபெரும் நற்செய்தி விடுதலைப் பெருவிழாவை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். பல போராட்டத்தின் மத்தியிலும் தேவதிட்டம் நிறைவேற தேவன் கிருபை செய்தார். தடைகளை எல்லாம் தேவன் தகர்த்துப் போட்டார். நம் சகோதரி கலா வின்சென்ட்ராஜ் அவர்களும், நம் சகோதரர். வின்சென்ட்ராஜ் அவர்களும் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தார்கள். லீதியாளின் இருதயத்தை திறந்த தேவன் அங்கு வந்திருந்த மக்களின் இருதயத்தை திறந்தார். தேவ வார்த்தையினால் ஜனங்கள் தொடப்பட்டார்கள். அவர்கள் வாழ்வில் இருந்த கட்டுகள் உடைந்தது. பாவசாப கிரியைகள் முறியடிக்கப்பட்டது. தேவனுக்கு சாட்சிகளாக மாறினார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது. இக்கூட்டங்களை ஜயா டேவிட் தேவசகாயம் அவர்கள் குடும்பத்தோடு மிகவும் நேர்த்தியாக ஏற்பாடு செய்திருந்தார்கள். இவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.









மதுரை பட்டணத்தின் ஆசீர்வாதத்திற்காக, எழுப்புதலுக்காக, ஜனங்களின் இரட்சிப்பிற்காக ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமையில் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் வைத்து நடைபெறும் ஊழியத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து வருகிறார். ஒவ்வொரு மாதமும் புதிய ஆத்துமாக்களை தேவன் அழைத்து வருகிறார். வந்த ஒவ்வொருவரும் ஆவி ஆத்துமா சரீரத்தில் விடுதலையை பெற்று சாட்சிகளாக மாறுகிறார்கள் தேவனுக்கே மகிமை உண்டாவதாக. இக்கூட்டங்களில் நம் சகோதரி அவர்கள் பாடல்களை பாடி, ஆராதனையை நடத்தும்போது, நம் சகோதரர் அவர்கள் தேவ செய்தி கொடுக்கும் போதும் தேவன் ஜனங்களை தொட்டு அவர்களை விடுதலையாக்குகிறார். நீங்களும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற உங்களை அன்போடு அழைக்கிறோம்.



## இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி உலகைசுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில்தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O)** இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது **GOOGLE PAY** மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை **944 2800 449** என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு **WHATSAPP** மூலமாகவோ, **accounts@jesuslives.in** மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

Jesus Lives MINISTRIES

# திண்டுக்கலில்

# முழு இரவு ஜெபம்

ஆகஸ்ட்

**14**

வியாழக்கிழமை

இரவு:

**9:30 PM to 4:00 AM**

Location



EVG. VINCENTRAJ

EVG. KALAVINCENT

**இடம்:**

CSI தூய பவுல் ஆலயம், பாரிஸ் ஹால்,
SBI பேங்க் எதிரில், திண்டுக்கல்.

தொடர்புக்கு :94980 00449, 94428 00449